தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.09.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 592/F/2023

திரு.கணேசன், -- புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி, -- பொது அதிகார அமைப்பு
தூத்துக்குடி மாவட்டம்-628 002.

******

## இறுதிஆணை

இவ்வாணையம் 27.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திருமதி.மாலதி நல்லமுத்து, கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திரு.பாலசுந்தரம், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம்-628 002 ஆகியோர்கள் 01.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரரவிற்கிணங்க, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில் தான் 27.05.2026 அன்றைய தேதியின் விசாரணைக்காக 16 கோப்புகளுடன் ஆணையம் முன் ஆஜராக எடுத்து வந்திருந்தாகவும், தான் கண்காணிப்பாளராக பணிபுரிந்த சமயம் பொதுத் தகவல் அலுவலர் (பொ) தனக்கு வழங்கப்பட்டது என்றும், முதன் முதலாக ஆணையத்திற்கு ஆஜரானதால் CP 592/F/2023-ற்கான கோப்பினை ஆணையத்திற்கு கொண்டு வந்ததில் மற்றொரு கோப்புடன் CP 592/F/2023-ற்கான கோப்பு இணைந்திருந்ததால் பதட்டமான நிலையில் தன்னால் மேற்படி வழக்கு கோப்பினை

ஆணையத்திற்கு சரிவர காண்பிக்க இயலவில்லை என்றும், இனிவரும் காலங்களில் கவனமுடன் செயல்படுவேன் என்று தெரிவித்து தனது எழுத்துமூல விளக்கத்தினை சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது.

2. மேலும் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, தனது எழுத்துமூல விளக்கத்தினை சமர்ப்பிக்க இரண்டு வார காலஅவகாசம் கோரினார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து, அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு விளக்கத்தினை சமர்ப்பிக்க இரண்டு வார கால அவகாசம் வழங்கியது.

3. அதனை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திருமதி.மாலதி நல்லமுத்து, கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம், மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திரு.பாலசுந்தரம், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம்-628 002 (தற்போது உதவி ஆணையாளர், திருநெல்வேலி மாவட்டம்) அவர்கள் 14.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, தனது எழுத்துமூல விளக்கத்தில், திரு.கணேசன், என்பவருக்கு ந.க.எண்.சி2/0002/2023, கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு 19.10.2024 அன்று பதிலறிக்கை வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்நேர்வில் மேற்படி மனுவினை பிரிவு எழுத்தர் தன்னுடைய கவனத்திற்கு கொண்டு வராத காரணத்தினால் உரிய காலத்தில் தகவல் வழங்க இயலவில்லை என்றும், மேலும் இப்பொருள் தொடர்பாக அப்போதைய பொதுத் தகவல் அலுவலராகிய தான் 16.11.2023 அன்றுடன் நாகர்கோவில் மாநகராட்சிக்கு பணிமாறுதல் செய்யப்பட்டதாலும், இவ்வழக்கின் மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பல்வேறு மனுக்களை தாக்கல் செய்வதும் பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை பாதிக்கின்ற வகையில் தொடர்ந்து தகவல் கோரி வருவதாகவும், இனி வரும் காலங்களில் இதுபோன்ற காலதாமதமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து, தனது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்கையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கத்தினை ஆணையம் ஏற்கவில்லை என்பதை ஆணையம் பதிவு செய்து, ஆணையம் அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

1. **மனுதாரரின் 29.12.2022 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவிற்கு தகவல்களை வழங்காததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.பாலசுந்தரம், கணக்கு அலுவலர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம் (தற்போது உதவி ஆணையாளர், திருநெல்வேலி மாவட்டம்) அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)ன் கீழ் அபராதம் ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை 01.09.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. மேலும் அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும்**

**ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.**

மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.ரா.ரமேஷ், கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் 01.09.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அபராதத் தொகை ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துகை சீட்டின் நகலினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்று, இந்த புகார் மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 592/F/2023**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்-626 202.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்**
**திரு.பாலசுந்தரம்,**
**கணக்கு அலுவலர்,**
**தூத்துக்குடி மாநகராட்சி,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

*(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)*

**தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்,**
**திருமதி.மாலதி நல்லமுத்து,**
**கண்காணிப்பாளர்,**
**தூத்துக்குடி மாநகராட்சி,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

**<u>புகார்தாரர்</u>**

திரு.கணேசன்,
எண்.1/63 A, அன்னை இல்லம்,
மேற்குதெரு, இருக்கன்குடி,
தூத்துக்குடி மாவட்டம்-626 202.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, நகர்ப்புற நிர்வாகக் கட்டிடம்,
சாந்தோம் உயர்சாலை,
MRC நகர், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For follow up)

Copy to: File NS/PA-